# இலங்கை புகையிரத சேவை

## இலங்கை புகையிரத சேவையின் புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள நிலையான உணவகங்களை குத்தகைக்கு விடுவதற்கான பெறுகைக்குழு கேள்வி கோரல்.

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் உணவகங்களில் இரு வருட காலத்திற்கு உணவு வகைகளை விற்பனை செய்யும் சேவையை நடாத்தி செல்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன .

1. ரம்புக்கண 2. நாவலப்பிட்டிய 3. மாத்தறை 4. பண்டாரவலை

மேற்படி உணவகங்கள் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களில் அட்டவணை 01 கீழ் தரப்பட்டுள்ளது .

01. தகைமைகள்

குறித்த துறையுடன் சம்பந்தப்பட்ட வியாபாரமாக செல்லுபடியாகும் பதிவு மற்றும் 01 வருட அனுபவம் இருப்பதோடு நிதி ஸ்திரதன்மையை உறுதி செய்ய 03 மாதங்களுக்கான வங்கி அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

02. கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.

பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு ஜனவாரி மாதம் 04 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் அல்லது உணவகம் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி அதிகாரியிடம் அல்லது குறித்த உணவகம் அமைந்துள்ள புகையிரத நிலையத்தின் நிலையாதிபதியிடம் மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிடமோ அல்லது குறித்த புகையிரத நிலையத்தின் நிலையாதிபதியிடமோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மனுக்கோரலின் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உணவகங்களுக்காகவும் தனி தனியாக கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும். ஒரு விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு உணவகத்திற்கு மாத்திரமே விலை மனுகோரலினை சமர்ப்பிக்கலாம்.

03. கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் .

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு உணவகம் சார்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில் உணவகத்தின் கேள்வி இலக்கம் மற்றும் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு , "புகையிரத நிலைய உணவகங்களுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஜனவாரி மாதம் 05 ஆம் திகதி பி.ப 2.00 முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம் ஒல்கொட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப்பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.

2024 ஜனவாரி மாதம் 05 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. இலங்கைப் புகையிரத சேவையின் சகல ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு உரிமை இல்லை.

06. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி சகல உணவகங்களை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

08. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909)

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை ,
கொழும்பு 10